2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

**நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.** யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

செய்தி மலர்

ஆகஸ்ட் மாத இதழ்

# சிறப்பான சுதந்திரம் உங்களுக்கு உண்டு.

சங் 16:6

*Surely you have a*

# DELIGHTFUL INHERITANCE.

Psalms 16:6

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,

| HMSM | XXVII | AUG |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரூ.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரூ 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள்

15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

## இந்த மாத வாக்குத்தத்தம்

# சிறப்பான சுதந்திரம் உங்களுக்கு உண்டு.

சங் 16:6

ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

மீண்டும் இந்த செய்திமலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 7 மாதங்களும் கிருபையாய் தேவன் உங்களை பாதுகாத்து ஆச்சரியமாய் உங்களை நடத்தி வந்துள்ளார்.

இந்த எட்டாவது மாதம் சிறப்பான சுதந்திரத்தை தேவன் உங்களுக்கு தருவார் (சங் 16:6). எனவே ஒவ்வொரு நாளும் தேவ சித்தத்தை அறிந்து, தேவனுக்கு பயப்படுகிற பயத்துடன் உங்களுக்காக தேவன் முன்குறித்த நன்மைகளை ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள தேவ பயத்துடன் தேவனை பின்பற்றுங்கள்.

உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்கிறேன். எனக்காகவும் குடும்பத்திற்காகவும் சபைக்காகவும் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

**Rev. Dr. J. Samuel Jebaraj**



# பண ஆசை

**ஆண்கள் பகுதி**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். பணம் வைத்திருப்பதே பாவம் என்று ஒரு சிலர் எண்ணுகிறார்கள். பணம் தீமையல்ல, பண ஆசையே தீமைக்கு வேராக இருக்கிறது. 1 தீமோ 6:10; எபி 13:5 – பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று வேதத்தில் பார்க்கிறோம்.

பணத்தை எப்படிக் கையாளுகிறோம் என்பதிலேயே நம் ஆவிக்குரிய முதிர்ச்சி அடங்கியுள்ளது. பூமிக்குரிய ஆஸ்தியை எப்படி ஆளுகிறோம் என்பதைப் பொறுத்தே நமக்கு நித்தியபலனை தேவன் தருகிறார். பணத்தை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதைக் கொண்டே நமக்கு நற்சாட்சி உண்டாகிறது. பணத்தை வைத்து ஒருவரின் சுயமதிப்பை பக்தியை வெற்றியை அளவிட முடியாது. பணத்தை வைத்து பரலோகம் செல்ல முடியாது. மத் 19:23– இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என்றார்.

பணத்தை வைத்து ஒருவர் திருப்தி அடைய முடியாது. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயை.(பிர 5:10)

பணஆசையானது தேவனுக்கு பதிலாக தன்னை எஜமானாக மாறிவிடும். தேவன் மீதுள்ள நம்பிக்கையை தன் பக்கம் திருப்பிவிடும். குறுக்குவழியில் பணம் சம்பாதிக்கத் தூண்டும். பெருமைக்கு இடம் கொடுக்க வைக்கும். பணம் விக்கிரகமாக மாறிவிடும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.( எபே 5:5, கொலோ 3:5)

பணம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒன்று. ஆனால் பண ஆசையே உலகின் அனைத்து தீமைகளுக்கும் வேராக இருக்கிறது. பணத்திற்கு உயிர் இல்லை. எனவே அது சுயமாக எதையும் செய்ய முடியாது. பணம் நாம் சொல்வதை செய்யும் ஒரு வேலைக்காரன். அதை வைத்திருப்பவர்களே அதைக் கொண்டு நன்மையோ தீமையோ செய்கிறார்கள். எனவே, குறுக்கு வழியில் செல்லாமல், நேர்மையான வழியில் உழைத்து சம்பாதிக்க நம்மை தேவனுடைய கரத்தில் அர்ப்பணிப்போம்.

## புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்..

# இந்த காலம்



பெண்கள் பகுதி

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! நாட்கள் பொல்லாதவைகளானபடியினால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். இதோ இப்பொழுதே அநுக்கிரகக்காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் என வேத வசனங்கள் கூறுகின்றன. இந்த காலம் எப்படிப்பட்ட காலம், அதற்கு நாம் செய்ய வேண்டியது,

**1) மவுனமாயிருக்க வேண்டிய காலம் அல்ல:**

இந்த காலம் நாம் மவுனமாயிருக்க வேண்டிய காலம் அல்ல. குடும்பத்திருக்காக, நம் ஜனங்களுக்காக, திறப்பில் நிற்க வேண்டிய காலம். இயேசுவின் வருகை மிக சமீபம். நாமும் நம் குடும்பத்தினரும் இயேசுவை சந்திக்க ஆயத்தமாய் இருக்க, அழிவின் நின்று பாதுகாக்கப்பட கண்ணீரோடு ஊக்கமாய் ஜெபித்து, பிரயாசப்பட வேண்டியதே. சத்தமிட்டுக் கூப்பிடு, அடக்கிக் கொள்ளாதே, எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய காலம் மவுனமாயிருக்க வேண்டிய காலம் அல்ல.

**2)செயல்பட வேண்டிய காலம்:**

இந்த காலம் நாம் தீவிரமாய் செயல்பட வேண்டிய காலம். எதிரியின் தாணையத்திற்குள் தைரியமாய் புகுந்து ஆத்துமாக்களை மீட்டு எடுக்க வேண்டிய காலம். சாத்தான் ஜனங்களின் மனக் கண்களை குருடாக்கி வைத்துள்ளான். வஞ்சித்து வைத்துள்ளான். ஜனங்கள் காக்கப்பட, சத்தியத்தை அறிந்து கொள்ள, நல்ல ஒரு ஆவிக்குறிய சபையில் அங்கம் வகிக்க, அவர்களை சீரான வழியில் நடத்த தீவிரமாய் செயல்பட வேண்டிய காலம்.

**3) கடைசிக் காலம்: (எழுப்புதல் காலம்):**

இது கடைசிக்காலம். கடைசிக் காலத்தில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், என்று தீர்க்கதரிசன வசனங்கள் கூறுகின்றன. இந்த காலம் நாம் எல்லாரும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பபட்டு கர்த்தருக்காக எழும்பி பிரகாசிக்க வேண்டிய காலம். கர்த்தர் எல்லாரையும் எடுத்துப் பயன்படுத்த விரும்புகிறார். எழுப்புதலுக்காக ஆயத்தமா பெண்களே!



**பெண்கள் ஆராதனை**

செவ்வாய் தோறும் காலை 10:00 -11:30 மணி வரை நமது சபையில் வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING




# ஈடுகட்ட முடியாத இழப்புகள்

**பொறுப்பு:** Pr. **காலேப் ராபர்ட்**
**உதவி:** Bro. **பிலிப்**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நாட்களும் காலங்களும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு வேகமாக ஓடும் காலத்தில் ஒரு தவறு அல்லது பாவம் செய்தால் அதன் கூலி நம்மளை எவ்வளவு பின்னாக தள்ளும் என்று யோசித்து இருக்கிறோமா?

குமார் என்று ஒரு நண்பனை எனக்குத் தெரியும். பத்தாம் வகுப்பு வரை நன்றாக படித்தவன். அதன் பின்னர் முக்கியமான கட்டத்திலும் கல்லூரியிலும் நண்பர்களோடு சுற்றி திரிந்து நாட்களை வீணாக்கினான். வீட்டில் முகம் கூட கொடுத்து பேசாமல், நண்பர்களோடு சிரித்து பேசி நாட்களை போக்கினான். அவன் பெற்றோர் சொல்வதை விடவும் தனக்கு எல்லாம் தெரியும், நான் பார்க்கும் உலகம் அவர்களுக்கு எங்கே தெரிய போகிறது, அதினால் நான் எடுக்கும் முடிவு தான் சரி என்று கீழ்படியாத ஒருவனாக இருந்தான். அவனுடைய தாய் ஜெபிக்கிற ஒரு தேவ மனுஷியாக இருந்தபடியினால், கர்த்தர் கிருபையால் தவறான பழக்கங்களில் சிக்காமல் பாதுகாக்கப்பட்டான். இருப்பினும் பெருமை எனும் பாவம் அவன் கண்களை மறைத்தது.

அநேக நேரம் நாம் இளையகுமாரன் தன் தந்தையிடம் வந்துவிட்டதோடு படத்தின் கிளைமாக்ஸ் முடிந்தது என்று நினைக்கிறோம். ஆனால் கதையே அங்குதான் ஆரம்பம். மன்னிக்கப்பட்டாலும் நம் மனம் பெரும்பாலும் முழுவதும் சீர்பொருந்துவதில்லை. அதினாலே நாம் செய்த தவறின், பாவத்தின் பலனை தேவன் அனுமதிக்கிறார் – நாம் உணர வேண்டும், கற்றுக்கொள்ள வேண்டும் என்று. நீதிமொழிகள் 11:2, 16:18, 29:23

குமார் தன் பெருமையினால் பெற்றோரை, மற்றோரை காயப்படுத்தினதால், இன்று வரை வாழ்வில் முன்னேறாத ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் நண்பர்கள் அவனைக் காட்டிலும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். நாம் செய்யும் தவறுகளின் பலன்கள் ஈடுகட்ட முடியா இழப்புகளை கொடுத்து விடும். குமார் போன்ற வாலிபரை பார்த்து நாம் திருந்திக்கொள்ள வேண்டும். என் வாழ்க்கை வேறு, எனக்கு அப்படியெல்லாம் நடக்காது என்று நீங்கள் நினைத்தால், அப்படி எண்ணித்தான் குமாரும் இன்று இப்படி இருக்கிறான். நீங்கள் அவனைப்போல ஆகாதிருங்கள்.

தேவனுக்கு, அவர் வார்த்தைக்கு, போதகருக்கு, பெற்றோருக்கு, முதியோர்களுக்கு கீழ்படியாமை – எல்லாம் பெருமையில் சேரும். நேபுகாத்நேச்சார் மற்றும் தாவீதின் ராஜபெருமை; பவுல் மற்றும் பேதுருவின் இனப்பெருமையை தேவன் சரிப்படுத்தினார். நம்மை நேசிக்கிற தேவன் நமது குணங்களை சரிப்படுத்தாமல் விடவே மாட்டார். அதற்கு கீழ்ப்படிந்து நாம் மாறும் தருணம் ஆவிக்குரிய, உலக ஆசீர்வாதம் நம்மிடம் வரும்; வந்தால் தங்கும்.

## GOD BLESS YOU...




# வழி காண்பித்த தேவன்

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

**அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும்
இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**



ஆபிரகாம், கிறிஸ்தவ பக்தியிலும் ஒழுக்க நெறிகளிலும் வளர்ந்த ஒரு வாலிபன். தன் வாலிப வாழ்க்கையைப் பரிசுத்தமாகக் காத்துக்கொண்டு தேவசித்தப்படி திருமணம் செய்து கொண்டான். அவன் மனைவியும் தேவனிடத்தில் பயபக்தி கொண்டிருந்தார்கள். இவர்களோடு கூட அந்த ஊரில் சில பேர் ஜெபம் செய்து இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். இவர்களை ஆவிக்குரிய விதத்தில் நடத்துவதற்கு ஆபிரகாமுக்கு சாமர்த்தியம் இல்லை. “ இயேசுவே இப்போது நான் என்ன செய்ய வேண்டும், யார் எனக்கு உதவி செய்வார்? ” என்று ஜெபித்தான். “ நீ தானியேல் என்ற தேவ மனுஷனின் கூட்டத்தில் சேர்ந்து கொள்” என்ற சப்தம் கேட்டது. “இயேசுவே! தானியேல் அவர்களை எனக்கு தெரியாது. நீங்களே வழி நடத்துங்கள்” என்று ஜெபித்தான்.

ஆபிரகாம் 1958 ஆம் ஆண்டு இரயில்வே துறையில் வேலை செய்து வந்தார். இரயிலில் யாரோ ஒருவர் ஒரு கைத்தாளை கொடுத்தார். சென்னையிலுள்ள ஒய்.எம்.சி.ஏ கல்லூரி மைதானத்தில் தானியேல் என்ற தேவமனுஷன் கூட்டம் நடத்திக் கொண்டிருப்பதாக எழுதப்பட்டிருந்தது. ஆபிரகாம் ஆண்டவரை அளவில்லாமல் துதித்தான். அந்த கூட்டத்திற்கு ஆந்திராவிலிருந்து 10 பேர் கொண்ட குழுவாகப் புறப்பட்டார்கள். ஆனால் அந்த கைத்தாளை தவறவிட்டு விட்டார்கள். இரவெல்லாம் பயணம் செய்து காலையில் சென்னை வந்தடைந்தார்கள். ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று தானியேல் அவர்களின் கூட்டத்திற்கு போக வேண்டும் உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார். விலாசம் தெரிந்து கொள்ளாமல் எப்படி வந்தீர்கள் என ஸ்டேஷன் மாஸ்டர் கேள்வி கேட்டார். ஆனால் ஆபிரகாம் நம்பிக்கை இழக்கவில்லை, இயேசுவே எங்களை வழி நடத்தும் என்று ஜெபித்தார். சிறிது நேரத்தில் நாங்கு பேர் அவர்கள் அருகில் வந்து, தானியேல் ஐயா உங்களை அழைத்து வர எங்களை அனுப்பினார்கள். தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினார், என்று சொன்னார்கள். ஆபிரகாம் மற்றும் குழுவினர் தேவனை துதித்தார்கள். தேவனுக்கு உண்மையான சாட்சியானார்கள்.

அன்பான சிறுபிள்ளைகளே! நாம் ஆராதிக்கும் தேவன் என்ன செய்வதென்று தெரியாத சூழ்நிலையிலும், ஜெபிக்கும் போது நமக்கு வழி காண்பித்து நடத்துவார். நீங்களும் ஜெபித்து ஜெயம் பெறுங்கள்.



## மனப்பாடவசனம்: ஏசாயா 48:17

**கர்த்தர் சொல்லுகிறதாவது:“பிரயோஜனமாயிருக்கிறதை உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.”**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

**CHILDREN’S TIME**
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

**நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.**

**மாதம் தேவை: ரூ.1,94,100**

**பொறுப்பு: Bro. அர்னால்டு**


**Pr. Daniel Babu**
*Gujarath*


**Pr. Stephen Rathod**
*Rajasthan*


**Pr. Mandeep kidhay**
*Moga*


**Pr. Chaman Masih**
*Ablowal*


**Pr. Binu Vijayan**
*Tripuri*


**Pr. SawarGill**
*Gurdaspur*


**Pr. Peter Masig**
*Taran Taram*


**Pr. Sandeep Singh**
*Chunnai Kalan*


**Pr. Inderjit Singh**
*Mohali*


**Pr. Prasenjit Basumatary**
*Assam*


**Pr. Karthick**
*Chandigarh*


**Pr. Gurdial Singh**
*Dehriwal Droga*


**Pr. Rajkumar**
*Kurali*


**Pr. Rajesh**
*Mahatpur*


**Pr. Simson**
*Karnataka*


**Pr. Happy Masih**
*Sarspur*



**Pr. Jirma Lal**
*Bazara*


**Pr. Caleb**
*Delhi*


**Pr. Heral Kaddara**
*Rajasthan*


**Pr. Arionp Kumar**
*Ajimar*


**Bro.Sam Guna Seelan**
*Sharing Love Mission*


**Pr. Kamal Deep**
*Punjab*


**Pr. Godson Joy**
*Punjab*


**Pr. Harjeet Kaur**
*Nawashar*


**Pr. Jaswinder Kumar**
*Delhi*


**Pr. Pritam Singh**
*Rajasthan*


**Pr. Sonu**
*Makhu*


**Pr. Patras Masih**
*Feruyzepur*


**Pr.Dhananjay Nokman**
*Assam*


**Pr. Jinod Rabha**
*Assam*


**Bro. Prakash**
*Shalom Charity Trust*


**Sis. Sugantha**
*Shalom Charity Trust*


**Bro. Joshua Bhuriya**
*Shalom Charity Trust*


**Sis. Karuna K. Damor**
*Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

**எங்களது வங்கி கணக்கு எண்:**

**Name** : Assembly of God Church, Pudukottai.
**Bank** : TMB
**A/c No.** : 035100050313093
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. வேதமுத்து, Sis. கவிதா | 16 |
| 02 | Bro. தனராஜ், Sis. எஸ்தர் | 18 |
| 03 | Bro. அற்புதராஜ், Bro. யாக்கோபு | 19 |
| 04 | Pr. ராஜன், Sis. கோயில் செல்வி | 24 |
| 05 | Bro. ரூபன், Sis. பேன்சி | 16 |
| 06 | Bro. சாமுவேல் பீட்டர், Bro. பால் | 14 |
| 07 | Sis. ஜெயா , Sis.அமுதா | 11 |
| 08 | Sis. மேரி செல்வி, Sis. தேன்மொழி | 15 |
| 09 | Sis. வசந்தா , Sis. காஞ்சனா | 16 |
| 10 | Sis. சாராள் ஜெயராணி, Bro. சதீஷ் | 12 |
| 11 | Sis. பொன்செல்வி, Bro. அலைக்ஸ் | 19 |
| 12 | Bro. ஜெபஞான குணசிங், Bro. இம்மானுவேல் | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

● நான் ஒரு வருடமாக இந்த ஆலயத்திற்கு வருகிறேன். எனது வலது மார்பில் வலி மற்றும் கட்டி இருந்தது. பரிசோதித்த மருத்துவர் கேன்சர் கட்டி மாதிரி உள்ளது என்று சொன்னார்கள். ஆலயத்தில் வந்து, எனக்கு இந்த கட்டியில் இருந்து விடுதலை தருமாறு விசுவாசத்தோடு வேண்டினேன். ஸ்கேன் ரிப்போர்ட்டில் நார்மல் என்று வந்தது. கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக ஸ்தோத்திரம். – Sis. விஜி

---

● எனக்கு சர்க்கரை நோய், தைராய்டு என இரண்டு பிரச்சனைகள் இருந்தது. சென்ற வாரம் பாஸ்டர் ஜெபம் பண்ணும் போது நான் அழுது ஜெபத்தேன். தேவன் இந்த இரண்டு பிரச்சனையிலிருந்து பரிபூரண விடுதலை தந்தார். – Sis. ஷைலஜா

---

● நான் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து சமைப்பதற்காக குக்கரை அடுப்பில் வைத்தேன். வீசில் வரவில்லை. அடுப்பில் இருந்து தூரமாய் உட்கார்ந்திருந்தேன். திடீரென்று குக்கர் வெடிக்கும் சத்தம் கேட்டது. குக்கர் வெடித்து சாப்பாடு எல்லாம் சிதறி கிடந்தது. உடனே போய் சிலிண்டரை அணைத்து விட்டேன். கர்த்தர் பெரிய ஆபத்திலிருந்து என் ஜீவனையும் வீட்டையும் சேதமின்றி பாதுகாத்தார். தேவனுக்கு கோடான கோடி நன்றி செலுத்துகிறேன். – Sis. செல்வா, இருவப்புரம்

---

● நான், என் தங்கை மற்றும் குழந்தையுடன் ஸ்கூட்டியில் சென்று கொண்டிருந்த போது எதிரில் பஸ் ஒன்று வந்தது. ஒதுங்க இடம் இல்லாமல் நிலை தவறி கீழே விழுந்து விட்டோம். கிருபையாய் தேவன் ஒரு சிறு காயம் கூட இல்லாமல் காத்தார். ஆண்டவருக்கு கோடான கோடி நன்றி! – Sis. சலோமி, சக்கம்மாள்புரம்


A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code ல் இணைக்கப்பட்டுள்ளது.



அமாவாசை ஜெபம்

22 ஆகஸ்ட் வெள்ளி

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00–12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

## ஆகஸ்டு -2025

லூக்கா எழுதின சுவிஷேசம் அதிகாரம் 1 முதல் 12 வரை
(வசன இருப்பிடம் எழுதவும்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | |
| | | | 3 | | | |
| | | | 4 | | 5 | |
| | | | 6 | 7 | | |
| | 8 | | | | | 9 |
| | | | | 10 | | |
| 11 | | 12 | | | | |

**வலமிருந்து இடம்**

01) யோவானாலே ஞானஸ்நானம் பெற்றவர்கள் தேவன் யார் என்று அறிக்கையிட்டார்கள்?

03) எத்தனை நாளான பின்பு அவர் பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக் கொண்டு ஜெபம் பண்ண மலையின் மேல் ஏறினார்?

04) எப்படிப்பட்ட நேரத்தில் மனுஷகுமாரன் வருவார் என்றார்?

06) தகப்பனிடத்தில் மகன் முட்டையைக் கேட்டால் அவனுக்கு எதைக் கொடுப்பேனோ என்றார்?

10) தேவையானது எத்தனை?

**இடமிருந்து வலம்**

02) நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்தது யார்?

03) எத்தனை பேரை நியமித்து தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்?

08) நியாயசாஸ்திரிகளிடம் எப்படிப்பட்ட திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள் என்றார்?

12) மனுஷகுமாரன் எந்த நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்?

**மேலிருந்து கீழ்**

05) உங்களுக்கு எதைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் என்றார்?

08) எஜமானுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் எத்தனை அடிகள் அடிக்கப்படுவான்?

09) யார் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல?

**கீழிருந்து மேல்**

07) எது கூட வளர்ந்து விதையை நெருக்கிப் போட்டது?

08) சகரியா எந்த ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன்?

09) எலியா எந்த நாட்டிலுள்ள விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டான்?

11) இயேசு பன்னிரண்டு பேரை தெரிந்து கொண்டு அவர்களுக்கு என்ன பெயரிட்டார்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

## பரிசு பெறும் 5 நபர்கள்:

1) Sis.P. பிரேமா, சேர்வை
2) Sis. S. ரூத், M.K. காடு
3) Sis. ஜெமிமா, தளவாய்புரம்
4) Sis.S. கனகலீலா, காமராஜ் நகர்
5) Sis. மரிய சோபி பீட்டர், தூத்துக்குடி

## எங்களது வங்கி கணக்கு எண்:

இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,

**Name** : J. Samuel Jebaraj
**Bank** : ICICI - Bank
**A/c No.** : 613901506045
**IFC Code** : ICIC 0006139
**Branch** : Tuticorin

**UPI ID:**
prjsjebaraj@okaxis

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

05.08.2025 - செவ்வாய்க்கிழமை
**ஊழியர்கள் ஐக்கிய கூடுகை - திருநெல்வேலி**

06.08.2025 - புதன்கிழமை
**விடுதலை பெருவிழா - துத்திக்குளம்**

15.08.2025 - வெள்ளிக்கிழமை
**7 மணி நேர உபவாச ஜெபம்-கயத்தாறு**

15.08.2025 - வெள்ளிக்கிழமை
**அற்புதத்தின் இரவு - பணகுடி**

19.08.2025 - செவ்வாய்க்கிழமை
**முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி**

22.08.2025 - வெள்ளிக்கிழமை
**அமாவாசை ஜெபம் - பிரையர் பார்க்**

27.08.2025 - புதன்கிழமை
**மண்டல வாலிபர் முகாம்- சேலம்**

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். எபி 10:25**




எங்கள் முகவரி:

Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.

www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349

ABOUT US

SCAN ME

To ..................................................................................

..................................................................................

..................................................................................